பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 29 செவ்வாய்க்கிழமை 12.03.2024 கதிர் 126

# வெளிப்படைத் தன்மையே இல்லாத ஐ.எம்.எவ். திட்டத்தை ஏற்க முடியாது

## எதிர்க் கட்சிகள் சார்பில் சுமந்திரன் நேற்று நேரில் தெரிவிப்பு



போதிய வெளிப்படைத்தன்மையும் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான கரிசனையும் இல்லாத நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின்(ஐஎம்எவ்)பொருளாதாரமீட்சித்திட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்காது என்று நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன்.

சர்வதேச நாணய நிதியத்தின் ☞2

## இது ரகசியம் அல்ல!

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் எதிர்க் கட்சித் தலைவர்கள்பேசுவதற்காகஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நேற்று ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில்எதிர்க் கட்சிகளின்சார்பில்கலந்துகொண்டிருந்த ஒரே நபர் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் மட்டும்தான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் எவ்வளவு காலத்திற்குப் பதவியில்நீடிப்பாரோதெரியாது,அதனால் நாணயநிதியத்தின்திட்டம்குறித்தமுழுத் தகவலையும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதனைக் கெட்டியாப் பிடித்துக்கொண்டரணில், எதிர்க்கட்சியினர் நாணய நிதியப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்று மளமளவெனக் காரியமாற்றி திங்கட்கிழமை ☞2

# 23 வயது இளைஞன் வாள் வெட்டில் சாவு

## வட்டுக்கோட்டையில் நேற்று மிலேச்சத்தனம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதான தவச்செல்வம் பவிதரன் என்பவரே உயிரிழந்தார்.


காரைநகருக்கு சென்று விட்டு வட்டுக்கோட்டை திரும்பிக் கொண்டிருந்தபோது நேற்றுப் பகல் வழிமறித்து வாள்களால் வெட்டியுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த ☞8

# மரதன் ஓட்டத்தில் பங்கெடுத்த மாணவன் திடீரென உயிரிழப்பு

## திருக்கோவில் தமிழ் பாடசாலையில் பரிதாபம்; அம்பாறையில் பெரும் சோகம்





மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டிருந்தமாணவன் ஒருவன் திடீரென நோய் வாய்ப்பட்டு உயிரிழந்த சம்பவம் அம்பாறையில் பெரும்சோகத்தைஏற்படுத்தியுள்ளது. திருக்கோயில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை இந்த அசம்பாவிதம் இடம் பெற்றது. மாணவனை உடனடியாக வைத்திய சாலையில் சேர்ப்பித்தபோதும் 3 மணி நேரமாக அவருக்குச் சிகிச்சையளிக்காது மருத்துவர்கள்புறக்கணித்ததே இறப்புக்கான காரணம் என்று தெரிவித்து பாடசாலைச் சமூகத்தினர் வைத்தியசாலையின் முன் ☞2

# 33 வருடங்களின் பின்னர் சொந்த இடம்கண்ட மக்கள்

## வலி. வடக்கில் நேற்று உணர்வுபூர்வ காட்சி

33 வருடங்களாக இராணுவத்தினின்பிடியிலிருந்த தமது சொந்தக் காணிகளுக்குவலிவடக்கு மக்களில்ஒருபகுதியினர் நேற்றுநேரில்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

வடக்கில் இராணுவத்தின் பிடியிலிருந்த 67 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் வலி. வடக்கில் காங்கேசன்துறை தெற்கு மற்றும் மயிலிட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மக்கள் தமது சொந்தக்காணிகளுக்குச் செல்வதற்கு படையினர் நேற்று அனுமதி வழங்கினர்.

காங்கேசன்துறை தெற்கு ஜே/235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணித் துண்டுகளும், மயிலிட்டி தெற்கு (தென்மயிலை) ஜே/240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணித்துண்டுகளுக்கும் 33 வருடங்களுக்குப் பின்னர்மக்கள்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலங்கள்இவ்வளவு காலமும் படையினரின் முழுமையான ☞2

# கலகொடவில் நேற்றிரவு இருவர் சுட்டுக்கொலை

## ரி-56 துப்பாக்கியைப் பயன்படுத்தி பயங்கரம்

அம்பலாங்கொடயில் நேற்றிரவுஇருவர்சுட்டுக் கொல்லப்பட்டனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் கலகொட பகுதியில் உள்ள கடை ஒன்றின் முன்பாக நின்றிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுச் தப்பிச் சென்றனர் என்றும் அவர்கள்தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் மேலும் 3 பேர் காயமடைந்தனர். காயமடைந்த அனைவரும்பலப்பிட்டியவைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டனர்என்றாலும் இருவர் உயிரிழந்தனர்.

ரி.56ரகதானியங்கித் துப்பாக்கியைப் பயன்படுத்தியே இந்தக் கொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு நடந்த இரண்டாவது ☞2

# யாழ். பெரிய பள்ளிவாசலின் நிர்வாகத் தெரிவுக்கு எதிர்ப்பு

## வெளி மாவட்டத்தவர் வேண்டாம் எனக் கண்டனம்




யாழ் பெரியமொகைதீன்பள்ளிவாசல்நிர்வாகத்திற்கு வெளி மாவட்டத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்தப் புதிய நிர்வாக சபைத் தெரிவை வன்மையாக கண்டிப்பதாக யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சரபுல் ☞8

# வெடுக்குநாறியில் பொலிஸ் அடாவடியை கண்டித்து நல்லூரில் நேற்று போராட்டம்



வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தில் பொலிஸார் சப்பாத்துக் கால்களுடன் சென்று, பக்தர்களைக் குண்டுக் கட்டாகத் தூக்கி வீசி, சிவராத்திரிவழிபாடுகளை கலைத்ததைக்கண்டித்து நல்லூரில் நேற்று கவனவீர்ப்புப்போராட்டம் இடம்பெற்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின்புற மதிலையொட்டித்திரண்ட சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகள், வைச பக்தர்கள் பலர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாட்டைக் குழப்பியது மட்டுமன்றி அது தொடர்பான குற்றச்சாட்டுக்களின் கீழ் ஆலய நிர்வாகிகள் 8 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரையும் உடனடியாகவிடுதலைசெய்யும் படியும் போராட்டக் காரர்கள்வலியுறுத்தினர்.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நேற்றுப் பிற்பகலில் இந்தப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்திருந்தது.

பேராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன்,செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈஸ்வரபாதம் சரவணபவன், சுரேஸ்பிரேமச்சந்திரன், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்,தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார்,சிவகுருஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் ☞2

# சம்பளத்தை உயர்த்த வெட்கமில்லையா? மத்திய வங்கி முன் நேற்று ஆர்ப்பாட்டம்



மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் எக்கச் சக்கமாக அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக ஆர்வலர்கள் நேற்று மத்திய வங்கிக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

''சம்பளத்தை உயர்த்த வெட்கமில்லையா'', ''கடற்கொள்ளையர்களை விட இவர்கள் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். கூட்டத்திற்கான அழைப்பு நேரடியாக ஜனாதிபதி செயலகத்தால் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் அரசுக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தன. இவர்களுக்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் தனியான அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிறீதரனுக்கே ஜனாதிபதி செயலகத்தால் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அந்த அழைப்பை ஏற்று கூட்டத்தில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அவர் முதலில் தெரிவித்திருந்தார். பின்னர் தமிழ் அரசுக் கட்சி சார்பில் சம்பந்தன் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று அவர் தெரிவித்திருந்தார் என கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகையின் இணையத்தளம் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. எனினும் இன்றைய கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமாக எவரும் பங்கேற்றிருக்கவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக, ஜனவரியில் திருகோணமலையில் நடந்த கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் சீறதரன் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அந்தப் பொதுக் குழுக் கூட்டம் கட்சியின் யாப்புப்படி நடக்கவில்லை என்பதைக் கட்சி நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்டதால் சிறீதரன் இப்போது கட்சியின் தலைவரா இல்லையா என்று தமிழ் மக்கள் திரிசங்கு சொர்க்கத்தில் அந்தரித்தாலும் கட்சியின் தலைவர் அவர்தான் என்று ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டதனால் அவருக்கே நேரடியாக அழைப்பு அனுப்பப்பட்டது.

சுமந்திரன் எந்தக் கட்சியின் சார்பில் எப்படி அழைக்கப்பட்டார் என்பதற்கு விளக்கமில்லை. ஜனாதிபதியின் நேரடி அறிவுறுத்தலின் பேரில் அவருக்கு அழைப்பு அனுப்பப்படுவதாகத்தான் ஜனாதிபதி செயலகத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. நேற்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்தின் சார்பிலுமான ஒரேயொரு பிரதிநிதியாக அவர் மட்டுமே கலந்துகொண்டிருந்தார். நாணய நிதியத்தின் பெருளாதார மறுசிரமைப்புத் திட்டம் தொடர்பில் எதிர்க் கட்சிகளின் கரிசனைகளைத் தான் அங்கு முழுமையாக வெளிப்படுத்தினார் என்று சுமந்திரன் கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார்.

இருப்பினும் இந்தக் கூட்டத்தில் தமது கட்சியின் சார்பில் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. தாமும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள் என்று தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) சார்பில் விஜித ஹேரத் ஊடகங்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படியே அவர்கள் இருவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதியின் கூட்டத்திற்கான அழைப்பை முஸ்லிம் காங்கிரஸ் நேரடியாக நிராகரிக்காதபோதும் போதிய கால அவகாசம் இல்லை என்று தெரிவித்திருந்தது. அந்தக் கட்சியின் சார்பிலும் எவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அத்தோடு எதிர்க்கட்சியின் ஏகோபித்த பிரதிநிதியாக அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் செயற்படுவார் என்கிற அறிவிப்பு ஏதும்கூட விடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் கூட்டத்தில் சுமந்திரன் கலந்துகொண்டமை சமூக ஊடகங்களில் அவர் அடுத்த சில நாட்களுக்கு 'ரோஸ்ட்' செய்யப்படுவதற்கான 'கென்டன்டை' அள்ளிவழங்கியிருக்கிறது. கொழும்பில் அண்மையில் நடந்த ரோயல் - தொமியன் பாடசாலைகளின் கிரிக்கெட் 'பிக் மட்ச்' நிகழ்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சுமந்திரனும் அருகருகே மிக நெருக்கமாக இருந்து பார்வையிட்ட ஒளிப்படம் வெளியாகி இருந்த நிலையில், சுமந்திரனுக்கு எதிராக சமூக ஊடகப் போராளிகள் ஏற்கனவே வேகம் எடுத்திருக்கும் நிலையில், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிய கதையாக சர்வதேச நாணய நிதியக் கூட்டமும் அவர்களுக்குச் சிக்கியுள்ளது. இனியென்ன அடுத்த சில வாரங்களுக்கு அவர்களுக்குக் கொண்டாட்டம்தான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வெளிப்படைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார மறுசிரமைப்புத் திட்டம் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர்களுடனான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. எனினும் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் அரசுக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், சபைத் தலைவர், நிதி இராஜாங்க அமைச்சர்கள் இருவர், மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் சார்பில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எதிர்க் கட்சிகளின் நிலைப்பாட்டை சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளிடம் தெளிவுபடுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் (ஞானிய்) வேலைத்திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் வெளிப்படைத் தன்மை இல்லாதிருப்பது குறித்துக் கணிசமான கரிசனைகளை எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் தொடர்பில் அந்த அமைப்பு ஏற்கனவே அரசுக்கு வழங்கியிருக்கக்கூடிய பகுப்பாய்வு தொழில்நுட்ப உதவி அறிக்கைகள் எதிர்க்கட்சியினருக்குக் கிடைக்காதமையையும் சுமந்திரன் அங்கு சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக, அரசின் வருமானத்தை உடனடியாக அதிகரிப்பதற்கு வசதியாக நேரடி வரிகளை உயர்த்துவதற்குப் பதில் பெறுமதி சேர் வரியான 'வற்' வரி ஏன் அதிகரிக்கப்பட்டது என்பதற்கான விளக்கம் என்ன என்பது தெரியவரவில்லை என்றார் அவர். அப்படி 'வற்' வரி அதிகரிக்கப்பட்டதற்கான நியாயம் என்ன என்று அவர் கேள்வி எழுப்பினார்.

சர்வதேச நாணய நிதியத்தால் 2024 பெப்ரவரிக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட 15 இலக்குகளை அடைவதில் ஆளும் தரப்பு தோல்வி அடைந்துள்ளதையும் சுமந்திரன் அங்கு சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலளித்த ஆளுமத் தரப்பினர் நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள், அந்த இலக்குகளை அடைவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

அத்தோடு, நாணய நிதியத்தின் தொழில்நுட்ப அறிக்கையை எதிர்க்கட்சியினர் அணுகமுடியாதிருப்பது தொடர்பான அவரது கரிசனையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும், அந்த அறிக்கையை எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வழங்க கூட்டத்தில் ஒப்புக் கொண்டனர்.

## கலகொடவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டுச் சம்பவம் இதுவாகும். முதலாவது சம்பவம் பிட்டிகலவில் இடம்பெற்றது. அதிலும் ஒருவர் கொல்லப்பட்டது.

## 33 வருடங்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தன.

விடுவிக்கப்பட்ட இந்த இடங்களில் இருந்த முகாம்கள் மற்றும் படைத்துறை அலுவலகங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. அவற்றை அகற்றும் பணிகள் இன்னும் சில நாள்களில் முடிந்துவிடும் என்றும் அதன் பின்னர் தாம் தடையின்றி அந்தப் பகுதிகளுக்கு வந்து செல்ல முடியும் என்றும் படையினர் தம்மிடம் தெரிவித்தனர் என்று காணி உரிமையாளர்கள் கூறினர்.

பாலாலி இராணுவத் தளத்தில் இருந்து படையினர் யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியபோது 1990ஆம் ஆண்டு இந்தப் பகுதி மக்கள் தமது சொந்தக் காணிகளிலிருந்து வெளியேறியிருந்தனர். அதன் பின்னர் நேற்று வரையில் தமது சொந்தக் காணிகளுக்குச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

தற்போதாவது தமது காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பது பெரும் மகிழ்ச்சியளிப்பதாகக் காணி உரிமையாளர்கள் உணர்ச்சிவசப்பட்டுத் தெரிவித்தனர். போராலும் நீண்டகால இடம்பெயர்வாலும் பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள தாம், தமது காணிகளைத் துப்புரவாக்கி சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கான வசதிகளை அதிகாரிகள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமிகள், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், மத குருமார்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு பொலிஸாரின் செயலுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

## மரதன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் மெதடித்த மிஷன் தமிழ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை ஒட்டி நேற்றுக் காலை மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த விதுர்ஷன் என்ற 16 வயதுடைய மாணவனே உயிரிழந்தான்.

மரதன் ஓட்டப் போட்டியை நிறைவு செய்த விதுர்ஷன் பின்னர் வகுப்பறைக்குச் சென்றுள்ளார். அங்கு வயிற்றுக்குள் கொழுவிப் பிடிப்பதாக நண்பர்களிடம் கூறியிருக்கிறார். உடனடியாக அவரை திருக்கோயில் ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு அவருக்கு அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அக்கறைப்பற்று வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். த

திருக்கோவிலில் இருந்து அக்கறைப்பற்றுக்கு மாணவனை மாற்றுவதற்கு மூன்று மணிநேரத்திற்கும் மேலாகத் தாமதிக்கப்பட்டதன் விளைவாகவே அவன் உயிரிழந்தான் என்று பாடசாலைச் சமூகத்தினர் குற்றஞ்சாட்டினர். வைத்தியசாலையின் முன்பாகக் கூடிய அவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து படையினர் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மாணவனுக்கு சி.பி.ஆர். சிகிச்சை உட்பட போதியளவான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் எனினும்; போதிய வைத்திய உபகரணங்களைக் கொண்ட அம்பியூலன் வண்டி இல்லாததன் காரணமாக அக்கறைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாணவனை உடனடியாக மாற்ற முடியாமல் போனதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

உயிரிழந்த மாணவனின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோட்டா எழுதியவற்றில் சிலதுகள்தான் உண்மை

## உதய கம்பன்பில தெரிவிப்பு

கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள நூலில் ஒருசில உண்மைகளே காணப்படுகின்றன என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அந்தப் புத்தகத்தில் பல பொய்கள் எழுதப்பட்டுள்ள என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ''ஜனாதிபதிப் பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி" எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள நூலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் எம்மை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புத்தகம் வெளியானதும் அதை வாங்கி படித்தேன். அதில் ஒருசில உண்மைகளை போல் பல பொய்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. புத்தகத்தில் 66 ஆவது பக்கத்தில் "உதய மற்றும் விமல் ஆகியோர் எம்மை விட்டு விலகிச் சென்றார்கள்''என குறிப்பிடப் பட்டுள்ளது. பாரதூரத்தன்மையை அவர் மறந்து விட்டார்.

உண்மையில் நாங்கள் விலகிச் செல்லவில்லை. விலக்கப்பட்டோம். ஆளும் தரப்பை நெருக்கடிக் குள்ளாகும் வகையில் முன்னெடுக் கப்பட்ட செயற்பாடுகளை அவர் மறந்துவிட்டார். அரசநிதியை மோசடி செய்த குற்றத்துக்காக எங்களை விலக்கவில்லை. பொருளாதார பாதிப்பால் சமூக கட்டமைப்பில் ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து எடுத்துரைத்தோம். எமது கருத்துக்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் அவதானம் செலுத்தாததால் மக்களிடம் உண்மையை எடுத்துரைத்தோம். இதன் பின்னரே நாங்கள் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டோம்.

65ஆவது பக்கத்தில் "பஸிலுக்கும் உதயகம்மன்பிலவுக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடு காணப்பட்டது" என குறிப்பிடப்பட்டுள்ளது. பஷிலுக்கும் எனக்கும் தனிபட்ட முரண்பாடு தோற்றம் பெற நான் அவரின் மகளை திருமணம் முடித்துக்கொள்ள கேட்கவுமில்லை, மல்வானை சொகுசு வீட்டுக்கு உரிமை கோரவுமில்லை. எனக்கு அவரிடம் அரசியல் முரண்பாடு இருந்ததே தவிர தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் இருக்கவில்லை. ஆகவே பஸிலுக்கும் எனக்கும் இடையில் காணப்பட்ட தனிப்பட்ட பகையை கோட்டபய ராஜபக்ஷ வெளிப்படுத்த வேண்டும்.

பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் மேற்குலக நாடுகள் செயற்பட்ட விதம், இராணுவ தளபதி பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட விதம் குறித்து கோட்டபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். பொருளாதார நெருக்கடிகளை தீவிரப்படுத்தும் வகையில் அரசாங்கத்துக்குள் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதாக நாங்கள் குறிப்பிட்டதை கோட்டபய ராஜபக்ஷ கவனத்திற் கொள்ளவில்லை. ஆகவே அந்த உண்மைகளையும் அவர் நாட்டுக்கு குறிப்பிட வேண்டும் -என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தெல்லிப்பழை மகாஜனா 18 வயது பெண்கள் தேசியமட்ட உதைபந்தாட்டத்தில் சம்பியன்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் 18 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சம்பியனாகியுள்ளது.

இப்போட்டி சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் களுத்துறை சென். ஜோன் கல்லூரி அணியை எதிர்கொண்ட மகாஜனா 3:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

முதலாவது பாதியாட்டத்தில் 1:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்த மகாஜனா, இரண்டாவது பாதியாட்டத்தில் மேலும் இரு கோல்களை பெற்று வெற்றியை உறுதிசெய்தது. தரணிகா 2 கோல்களையும் சஸ்மி ஒரு கோலையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். (05)

## அ/விஜிதபுர மகா வித்திக்கு ஸ்மார்ட் வகுப்பறை







அனுராதபுரம் மாவட்டத்தின் கெக்கிராவ வலயத்திற்குப்பட்ட தோணியாகல, கலாவெள, அஃவிஜிதபுர மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா நடைபெற்றது. இது ஒரு சிங்கள மொழிப் பாடசாலைக்கான கல்வியில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

வன்னி ஹோப் நிறுவனத் தலைவரும் அரச உத்தியோகத்தருமான ரஞ்சன் சிவஞானசுந்தரம் அவர்களின் உறுதியான தலைமைத்துவத்தாலும், கலாநிதி மாலதி வாரன் மற்றும் நல்லையா அறக்கட்டளையின் தாராளமான பங்களிப்புகளாலும் இத்திட்டம் சாத்தியமானது. வன்னி ஹோப் மாணவர்களுக்கு அதிநவீன கற்றல் கருவிகளை அணுகுவதன் மூலம் கல்வி அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் ரஞ்சன் சிவஞானசுந்தரம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய பணிப்பாளர் சஞ்சீவ விமல் குணரத்ன, இலங்கையின் வன்னி ஹோப்பின் முகாமையாளர் என். முரளீதரன் மற்றும் கல்வியியலாளர்கள், மாணவர்கள் மற்றும் மதிப்புமிக்க சமூக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கல்வியின் தரத்தை உயர்த்துவதில் சமூகத்தின் கூட்டு முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

இது விழா மற்றும் இந்த தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நமது கல்வி அமைப்பில் ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தை உங்களுக்குத் தரும்.

இந்தத் திட்டத்தை உயிர்ப்பிப்பதில் ஈடுபட்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஒன்றாக வேலை செய்வதன் மூலம், எப்போதும் மாறிவரும் உலகில் செழிக்கத் தேவையான அறிவு மற்றும் கருவிகளுடன் கூடிய பிரகாசமான எதிர்காலத்திற்காக எங்கள் மாணவர்களைத் தயார்படுத்துகிறோம். (05)

## தமிழ்க் கந்தையா வித்தியாலயத்துக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உதவி!



சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு ஆளுநரின் உத்தியோக வருகை அண்மையில் கந்தரோடையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.விஜயராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்டம் 306 பீ1 இன் ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் - லயன் சாவித்திரி பீற்றர் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும் லயன் தேவா டி பீற்றர் - லயன் ஜெசிந்தா தம்பதிகள் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்துக்கு வகுப்பறை ஒன்றுக்கு வர்ணம் தீட்டுவதற்கு 3 வாளி பெயின்ற் வழங்கப்பட்டது. (05)

## சீகாஸ் உயர் கல்வி நிறுவனத்தின் ஆறாவது பொது பட்டமளிப்பு விழா

சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்






சிசிஏஎஸ் உயர்கல்வி நிறுவனத்தின் 6 ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழா சீகாஸ் உயர் கல்வி நிறுவனத்தின் தலைவர் நஜிமுதீன் முன்னிலையில் நிறுவன இயக்குநரும் பதிவாளருமான திருமதி நஃப்கா இல்யாஸ் தலைமையில் அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வருட வருடாந்த பட்டமளிப்பு விழாவில், ஏறக்குறைய 200 மாணவர்களுக்கு யுகே கேட்ஹவுஸ் அவார்ட்ஸ் லிமிடெட் மூலம் உத்தியோகபூர்வமாக டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமாக்கள் வழங்கப்பட்டன. இதில் உளவியல், ஆங்கிலம், மேலாண்மை, மனிதவள மேலாண்மை, கல்வி, சிவில் இன்ஜினியரிங், அளவு ஆய்வு மற்றும் ஐ.சி.டி, இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு கல்வி மற்றும் மேலாண்மைத் துறைகளில் பட்டங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கையிலுள்ள மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் மொஹமட் துமிங் மற்றும் இலங்கையிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் கலாநிதி ஆரிப் றிசா கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வின் விருந்தினராக பேச்சாளர் இலங்கை, இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியும், நிலைத்தன்மை தொடர்பான பல்கலைக்கழக குழுவின் தலைவருமான பேராசிரியர் பிரசன்ன பிரேமதாஸ, அறிவொளி உரையை ஆற்றினார்.

மேலும், இந்த விழாவில் பல்வேறு மூத்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வித் தலைவர்கள், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## என்னதான் நடக்கிறது?

இலங்கையில் நேற்று மட்டும் மூன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மூன்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். பகலில் ஒன்றும் இரவில் இரண்டுமாக சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பகில் மஹியங்கனை, தம்பனை, குகுலபொல பிரதேச விஹாரை மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. விகாராதிபதியின் அறையை இலக்கு வைத்தே இந்தச் சூடு நடத்தப்பட்டுள்ளது. எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இரவில் முதாவது சம்பவம் பிட்டிகல, குருவல பகுதியில் இடம்பெற்றது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார்; பெண் உட்பட மேலும் மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நிகழ்த்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்கின்றனர் காவல்துறையினர். கடை ஒன்றின் முன்பாக நின்றிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டார். காயமடைந்தவர்கள் கல்லிடா பிராந்திய வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டனர்.

ரி–56 தானியங்கித் துப்பாகியைப் பயன்படுத்தியே இந்தக் கொலை நிகழ்த்தப்பட்டதாகப் காவல்துறையினர் சந்தேகிக்கின்றனர்.

இரவில் இரண்டாவது சம்பவம் அம்பலாங்கொடயில் இடம்பெற்றது. இதில் இருவர் கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கலகொட பகுதியில் உள்ள கடை ஒன்றின் முன்பாக நின்றிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுச் தப்பிச் சென்றுள்ளனர். ரி.56 ரக தானியங்கித் துப்பாக்கியைப் பயன்படுத்தியே இந்தக் கொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக் காலமாகவே இத்தகைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்துள்ளன. அதுவும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள், பாதாள உலகக் குழுவினர் போன்றவர்களை ஒழிப்பதற்கான 'யுக்திய' நடவடிக்கை காவல்துறையினரால் தொடங்கப்பட்டதன் பின்னர் இத்தகைய சம்பவங்கள் கட்டுப்படுவதற்குப் பதில் இன்னும் அதிகரித்துள்ளன.

இந்தச் சம்பவங்களுடன் படைவிட்டோடிகள் பலரும் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்கிற தகவல்களும் காவல்துறையினர் பக்கம் இருந்து வருகின்றது. ரி–56 போன் தானியங்கித் துப்பாக்கிகளை இயக்குவதற்கு வல்லமை படைத்த இவர்களால் இலங்கையின் பாதாள உலகம் வேறொரு பரிமாணம் அடைந்திருக்கின்றது என்பது கண்கூடு.

புதிய காவல் மா அதிபரும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸும் என்னதான் பாதாளக் கும்பல்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிவித்தாலும் சூட்டுச் சம்பவங்களும் உயிரிழப்புக்களும் குறைந்தபாடாயில்லை என்பதுதான் உண்மை. இது காவல்துறையினரின் நடவடிக்கைகளின் தரத்தையே கேள்விக்குள்ளாக்குகின்றது.

காவல்துறையினரின் 'யுக்திய' நடவடிக்கையில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டாலும்கூட, குற்றங்கள் குறைந்தபாடாயில்லை. இது ஒரு சாபக்கேடாக அமைந்திருக்கின்றது. மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதில் அதிக கவனம் செலுத்ததும் காவல்துறையினரும் படையினரும் குற்றங்களை ஒழிப்பதில் எவ்வளவு வினைத்திறனுடன் இயங்குகின்றார்கள் என்பதற்கு இந்தச் சூட்டுச் சம்பவங்கள் உதாரணங்களாக அமைந்துள்ளன.

காவல் மா அதிபரும் அமைச்சரும் வாய் வீச்சில் வல்லவர்களாக இருக்கிறார்களே தவிர செயற்பாட்டில் கோட்டைவிட்டுவிடுகிறார்கள் போன்றே தெரிகின்றது. அவர்களுக்குச் சவால் விடும் அளவிற்கு பாதாள உலகக் குழுக்கள் வலுப்பெற்றுள்ளன என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த நிலை விரைவில் மாற்றப்படவேண்டும்.

அதற்கு காவல்துறையினரும் படையினரும் அர்ப்பணிப்போடு செயலாற்றுவதும் உண்மையான அக்கறையோடு அரசியல் தலைமைத்துவம் இதுவிடயத்தில் வழங்கப்படவேண்டியதும் மிகி மிக அவசியம்.

## கற்பகதரு என்னும் அற்புதம்

# கள்ளும் பனையும்

அங்கம் –32



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.





பனையொடு தானும் சரிநிகர் சமமாக நிற்கவேண்டும் என்று தென்னையும் முயன்றபடியேதான் இருக்கிறது. ஒவ்வொரு தருணத்திலும் தென்னை முந்திக கொண்டு வந்துநிற்கும். ஆனால் பனையோ எந்தவிதச் சலனமுமின்றி தன்பாட்டில் , தனது பங்களிப்பினை வழங்கியபடியே இருக்கும்.பாளையினை வெளியிடும் விதத்தில் தென்னை யும் , பனையும் ஒத்துப் போவதாகவே இருக்கிறது. அப்படி இருந்தாலும் தென்னையினைப் பின்னுககுத் தள்ளி பனையானது முன்னால் வந்து நின்றுவிடுகிறது. தென்னையில் ஆண் , பெண், என்னும் நிலை இல்லை. பனையோ ஆண்பனை, பெண்பனை என்று இரண்டாக நிற்கிறது.தென்னையில் ஒரே இனம் மட் டுமே இருப்பதால் தென்னை பாளையினைத் தந்துவிட்டு நின்றுவிடுகிறது. பனையில் , ஆண்பனையும் பாளையினைத் தருகிறது. பெண் பனையும் பாளையினைத் தருகிறது. தென்னை இதனைப் பார்த்துவிட்டு ஒதுங்கியே நின்றுவிடுகிறது.தென்னையைப் பார்க்கப் பரிதாபமாகவே இருக்கிறதல்லவா ?

நுங்கினைப் பனை தந்தது. அதற்கு இணையாக இளநீரை தென்னையும் தந்தது. பனை பனம் பழத்தைத் தந்தது. தென்னையால் அப்படித் தரமுடியா நிலையில் தலை கவிழ்ந்து நின்று விடுகிறது. என்றாலும் தென்னையும் ஒவ் வொரு தரமும் முயற்சித்தபடியேதான் இருந்து கொண்டே வருகிறது. பாளையிலிருந்து பெறப்படும் சாற்றினை பனையும் தருகிறது. தென்னையும் தருகிறது. அந்தச்சாறு " கள் " என்னும் பெயரினுக்கு உரித்தாக மாறும் நிலை யிலும் பனையுடன் தென்னையும் சரநிகர் சமமாகவே முன்வந்து நிற்கிறது. ஆனால் தொடர்ந்தும் தென்னையினால் முன்வந்து நிற்கமுடியாமலேயே ஆகிவிடுவதையே காணுகிறோம். தென்னையிலிருந்து பெறப்படும் கள்ளினையும் குடிக்கிறார்கள். பனையின் கள்ளினையும் குடிக்கிறார்கள். எனினும் தென்னங்கள்ளை விடப் பனங்கள் ளினையே பலரும் விரும்பத்துடன் குடிக்கிறார்கள் என்பதுதான் நோக்கத்தக்கதாகும். தென்னங்கள் பற்றிய குறிப் புகள் அவ்வளவு சொல்லும் அளவுக்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் பனங்கள்ளுப் பற்றிய செய்திகள் சங்ககால இலக்கியத்திலும் அதன் பின்வந்த புலவர்களின் பாடல்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்க தேயாகும். பனங்கள்ளின் பயன்பாடு என்பது சமூகத்தில் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது என்பதும் நோக்கத் தக்க தாகும்.

" ஓங்கித் தோன்றும் தீம் கள் "
என்று நற்றிணை சொல்கிறது.

" காமம் கனைந்து எழ , கண்ணின் களி எழ
ஊர் மன்னும் அஞ்சி ஒளிப்பராரவர் நிலை
கள்ளின் கழி எழக் காத்தாங்கு "
என பரிபாடல் கள்ளையும் காமத்தையும் இணைத்துக் காட்டுகிறது.

" உண்மின் கள்ளே அடுமின் சோறே
எறிஅக் திற்றி ஏற்றுமின் புழுக்கே " என்று பதிற்றுப் பத்தும் கள்ளினை உண்பீராக என்று காட்டுவதும் நோக்கத்தக்கது.

" கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக்கு அனந்தர்த துஞ்ச வோனே
அவன் எம் இறைவன் யாமவன் பானர்
நெருநை வந்த விருந்திற்க மற்றுத் தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இதுகொண்டு
ஈவது இயலாளன் என்னாது நீயும்
வள்ளி மருங்குல் வயங்குஇழை அணியக்
கள்ளுடைக் கலந்தோம் யாம்மகிழ் தூங்கச்
சென்று வாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்து விழுமுறவே " என்று புறநாநூற்றில் வருகின்ற இப்பாடலின் பொருளைப் பார்க்கையில் கள்ளானது எப்படி அக் காலத்தில் இருந்திருக்கிறது என்னும் செய்தி காட்சியாய் மலர்வதை காண்கிறோம். " கள் ஆர் உவகைக் கலி மகிழ் உழவர் " கள்ளினை உண்டு உவகையினால் உழவர்கள் மகிழ்ச்சிய டைகிறார்கள் என்று அகநாநூற்றில் நக்கீரர் பாடுகிறார்.

" எரி அகைந்தன்ன தாமரை இடை இடை
அரிந்து கால் குவித்த செந் நெல் வினைஞர்
கள் கொண்டு மறுகும் சாகாடு அளற் றுறின்
ஆய் கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர
பெரிய நாண் இலைமன்று பொரி எனப் "

பரணரால் பாடப்பட்ட இப்பாடல் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது. உழவர்களுக்காக கள்ளினை ஏற்றிக் கொண்டு வருகின்ற வண்டியானது சேற்றில் புதையாமல் பாதுக்காக்க எப்படி செயறப்பட்டார்கள் என்ப தை யும், அங்கே அமைந்திருந்த அழகான சூழலையும் இப்பாடல் இங்கே படம் பிடித்துக் காட்டுகிறது. கள்ளினை வண்டியில் ஏற்றிச் செல்லும் அளவுக்கு கள்ளின் நிலைமை எப்படி அக்காலத்தில் இருந்தது என்பது மனதில் பதியும் வண்ணம் இருக்கிறதல்லவா !

" களிகன் களிகட்கு நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்திட்ட வெங்கட் - துளிகலந்து
ஓங்கெழில் யானை மிதிப்பச்சே றாகுமே
பும்புனல் வஞ்சி அகம் " கள்ளுண்டு களித்து நிற்பவர்கள்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கற்பகதரு என்னும் அற்புதம்.........

கள்ளை மற்றவர்களுக்கும் கொடுக்கிறார்கள். அதற்குக்காரணம் அவர்களும் தம்மைப்போன்று களிப்போடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தானாம்.கொடுக்கும் பொழுது கள்ளு நிலத்தில் சிந்துகிறதாம். அப்படிச் சிந்தும் கள்ளின் துளிகள் யாவும் சேர்ந்து கள்ளே அங்குள்ள தெரிவிலே ஓடுகிறதாம். அந்தத்தெருவில் யானைகள் நடப்பதால் அந்தத் தெரு சேறாகி விடுகிறதாம். தெருவே சேறாகும் அளவுக்கு அங்கு கள்ளின் பெருக்கம் இருப்பதோடு மக்களும் மகிழ்ந்து போய் இருக்கி றார்களாம் என்று - முத்தொளாயிரம் காட்டி நிற்கிறது.

மதுவைப் பற்றி சொல்லும்போது மது, நறவு, கள், பெரியகள், சிறியகள், தேறல், சொல்விளம்பி என்றெல்லாம் தமிழ் இலக்கியத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்போது மதுவை உணவாக , உணவே மருந்தாக உண்டார்கள். ( இப்போது போதைக்காக, உடல் திமிருக்காக சாராயம் எனப்படும் மதுவை நாடுகிறார்கள்)

சங்ககால ஔவையார் பாடிய ஒரு பாடல் புறநானூற்றில் வருகிறது. அதில் தனக்கு அதியமான் கள்ளி னைத் தந்ததாகவும், தானும் அவனோடிருந்து கள்ளினை உண்டதாகவும் இப்பாடல் அமைகிறது.

“சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் - மன்னே!
பெரிய கள் பெறினே
யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே “

இங்கு சிறிய கள், பெரிய கள் என்று சொல்லப்படுவது என்ன தெரியுமா ? கள்ளின் அளவினையே குறிப்ப தாகும். வேள் பாரியின் புகழைக் கபிலர் பாடுகிறார். அந்தப் பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகிறது. அந்தப் பாடல்களிலும் கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

“ மட்டுவாய் திறப்பவும் மையிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும் “

அடுத்த பாடலில், அதே கபிலர், பாரி வந்தவர்களுக்கு மதுவை வழங்கிய தையும் குறிப்பிடுகிறார்.

“ ஈண்டு நின் றோர்க்கும் தோன்றும் சிறு வரை
சென்று நின் றோர்க்கும் தோன்றும், மன்ற
களிறு மென்று இட்ட கவளம் போல,
நறவுப் பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்
வார் அசும்பு ஒழுகு முன்றில்,
தேர் வீசு இருக்கை, நெடியோன் குன்றே “

காவிரிபூம் பட்டினத்தில், கடற்கரையில் கள்ளுக்கடைகள் ஏனைய கடைகளைப் போலவே அடையாளப் படுத்தும் வகையில் கொடிகளோடு இருந்திருக்கிறதாம் என்பதைப்பட்டினப்பாலை காட்டி நிற்கிறது.

“ மீன் தடிந்து விடக்கு அறுத்து
ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்
மணல் குவைஇ மலர் சிதறிப்
பலர் புகு மனைப் பலிப் புதவின்
நறவு தொடைக் கொடியோடு “

குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் , பாலை என்னும் வகையில் எங்களின் முன்னோர்களின் வாழ் க்கை முறை அமைந்து காணப்பட்டது என்பது வரலாறாகும். நிலத்தையும் அது சார்ந்ததாயுமே இவ்வாழ்க்கை முறை அமைந் திருந்திருந்தது. இப்படி வாழ்ந்த மக்கள் வாழ்வில் ஆட்டமும் , பாட் டமும், கொண்டாட்டமுமாகவே வாழ்ந்திருக் கிறார்கள் என்பதை அவர்கள் காலத்திலெழுந்த சங்கப் பாடல்கள் வாயிலாகவே அறிந்து கொள்ளுகின்றோம். அந் தக் காலத்து மக்களின் வாழ்வில் , கள் என்பது தவிர்க்கப்பட்ட ஒன்றாகவே காணப்படவில்லை என்பதும் நோக்கத் தக்கதாகும். அவர்கள் கள்ளினைக் களிப்புடனே பருகினா ர்கள் என்பதையே காணக்கூடியதாக இருக்கிறது. தொடர்ந்தும் கள்ளானது களிப்பினை அளிக்கும் ஒன்றாகவே இன்றுவரை தொடர்கிறது என்பதும் நோக்கத்த க்கதாகும். அந்தக் கள்ளு எப்படி வருகிறது? எப்படி எடுக்கப்படுகிறது? அந்தக் கள்ளினை எடுப்பதில் எவ்வளவு சிரமங்கள் காணப்படுகின்றன? கள்ளினால் சமூகப் பொருளாதாரம் விருத்தியடைகிறதா ? கள்ளினால் தொழில் வாய்ப்புகள் உருவாகிறதா? கள்ளினைப் பெறுவதில் ஈடுபடுகிறவர்களின் நிலை எவ்வாறு அமைகிறது ? கள் என் பது போதை தரும் பொருளா? கள்ளினை வெறுத்து ஒதுக்கும் கருத்தை யார் முன் வைத்தார்கள் ? கள் ஒதுக்கப்பட வேண்டியதுதானா? என்று பல விஷயங்கள் கள்ளின் பின்னால் நிறைந்தே இருக்கிறது என்பதை யாவரும் கருத் திருத்துவது மிகவும் முக்கியமாகும். ஆகவே இவை அத்தனைக்கும் நல்ல விளக்கத்தைக் காண்பதும் அவசியமானது தானே !

கள்ளினைப் பற்றிய பல விளக்கங்களைப் பெற விளையும் வேளையில் “ பனை சீவுதல் “ என்னும் ஒரு பெயர் வரு கிறது. பனை சீவுதல் என்றாலே கள்ளிறக்குதல் என்றுதான் மனதில் பதியும்.அப்படித்தான் பதிந்தும் போயிருக்கி றது. இதில் பதனீர் இறகுக்குதலும் அடங்கியிருக்கிறது என்ப தும் நோக்கத்தக்கதாகும்.ஆண்பனையிலும், பெண்ப னையிலும் வருகின்ற பாளைகளிலிருந்துதான் சாறு எடுக்கப்படுகிறது. இதனைப் பூந்துணர்ச் சாறு என்று அழைக்கி ன்றார்கள்.

பூந்துணர் என்றால் பாளைகள் என்பதுதான் பொருளாகும்.ஆண், பெண் பனைகளில் வருகின்ற பாளைகளைப் பதப்படுத்தியே அதிலிருந்து சாறு பெறப்படுகிறது. பாளைகளைப் பதப்படுத்துதலை “ பாளை இடுக்குதல் “ என்று பெயரிட்டு அழைப்பது வழக்கமாய் இருக்கிறது,பாளையினைப் பலவிதமாகக் கையாண்டே சாறு எடுக்கப்படுகிறது என்பது நோக்கத்தக்கதாகும். அந்த வகையில் இடுக்கியும், வரிந்துகட்டியும், சீவியும், தட்டியுமே சாறு எடுக்கப்படுகி றது என்பது கருத்திருத்த வேண்டிய விடயமெனலாம். இவை யாவுமே தொழில் நுப்பத்தின் பாற்பட்டன என்பதும் நோக்கத்தக்கது. பாளையிலிருந்து சாற்றினை எடுப்பதிலும் கைதேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதும் முக்கிய செய்தியாகும்,சீவல் தொழிலிலும் நுப்பம் இருக்கிறது என்று பனையியல் பற்றி அறிந்தவர்கள் சுட்டிக் காட்டுவார் கள்.

பாளைகளில் சாறு எடுப்பது என்பது இலகுவான காரியம் அல்ல. பனையில் ஏறித்தான் சாற்றினை எடுக்க வேண் டும். அந்தச் சாறுதான் இனிப்பாயும், புளிப்பாயும் அமைகிறது. இனிப்பாய் இருக்கையில் “ பதநீர் “ என்னும் பெய ரையும் புளிப்பினைப் பெறும் வேளை “ கள் “ என்னும் பெயரையும் பெற்று நிற்கிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

இப்போது சில நுப்பமுறைகள் பனை ஏறும் தொழிலாளருக்கு வாய்த்திருக்கிறது.ஆனால் அந்தத் தொழில் நுப்ப முறையானது பரவலாக இடம் பெறவில்லை என்றுதான் கருதக்கூடியதாக இருக்கிறது. இதனால் பனை ஏறுபவர்கள் தொடர்ந்தும் தாம் பழகிய முறையிலேயே பனை ஏறித் தொழில் செய்து வருகிறார்கள் என்பதும் நோக்கத்தக்க தாகும்.

பனை ஏறுதல் என்பதில் முழுக்க முழுக்க மனித வலுவே பயன்படுத்தப்படுகிறது என்பது முக்கியமா கும்.நெஞ் சணைத்து ஏறுவது, கைகுத்தி ஏறுவது, குத்தி ஏறுவது , இடைக்கயிற்று முறை என்னும் முறைகள் கையாளப்படுகி ன்றன.பனை ஏறும் தொழிலாளர்களின் நெஞ்சு, கைவிரல்கள், கால்கள் என்பன பாதிக்கப்பட்டு காய்ப்பு உண் டாகிவிடுகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.பனை ஏறுவதில் உள்ள கஷ்டங்களைப் போக்குவதற்கு “ கயிற்று முறை “ என்னும் ஒரு முறை வந்திருக்கிறது. அருகருகே இருக்கும் பனைகள் இரண்டு கயிறுகளால் பிணைக்கப் படுகின்றன. ஒரு கயிறு மேலாகவும் , அ டுத்த கயிறு கீழாகவும் இருக்கும்படி கயிறு இணைக்கப்படுகிறது. ஒரு பனையில் ஏறிவிட்டால் மேல் கயிற்றினைப் பிடித்துக்கொண்டு அடுத்த பனைக்குப் போய்விடலாம். இப்படிச் செய்வ தால் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு நெஞ்சோ, கைவிரல்களோ,கால்களோ பாதிக்கா நிலை ஏற்படும் அல்லவா ! கூட்டமாக இருக்கும் பனைகளுக்கு இம்முறை பொருத்தமாய் இருக்கும். ஆனால் தூரத்தூர பனைகள் இருந்தால் இம்முறை எந்தளவுக்குப் பொருந்தும் என்பதும் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும். எப்படித்தான் பார்த்தாலும் பனை ஏறுதல் என் பது சற்றுக் கடினமானதும் , ஆபத்தானதுமான வேலைதான் என்பதை மனமிருத்துவது முக்கிய மாகும். கைநோக, நெஞ்சு வலிக்க, கால்நோக , களைப்புற்று கஷ்டப்பட்ட தொழிலாளர்களின் உழைப்பினால் த்தான் களிப்புற்று மகிழும் கள்ளுக் கிடைக்கிறது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

கள்ளினைப் பருகி களிப்புடன் திரிவார்க்கு - கள்ளுக்குப்பின்னால் இருக்கும் கஷ்டம் மட்டும் விளங்குவதேயில் லை.கள்ளினை விரும்பி விரும்பிக் குடிப்பார்கள். கள்ளிருக்கும் இடம் தேடி தேடி அலைவார்கள். கள்ளைக் கண்ட துமே துள்ளியும் குதிப்பார்கள். கள்ளுக்காகவே எதையுமே செய்தும் நிற்பார்கள். ஆனால் கள்ளினை இறக்குவாருக்கு , கள்ளினுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மட்டும் கொடுக்காமலே இருக்கிறார்கள். ( வளரும் )



காலைக்கதிர்
Kalaikkathir



# மாற்றத்தை நோக்கிய பயணத்தில் மக்கள் சக்தியின் கொழும்பு மாநாடு











(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் மாற்றத்தை நோக்கிய பயணத்தில் கொழும்பு மாவட்ட பெண்கள் மாநாடு ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. ஆயிரக்காணக்கான பெண்கள் மாற்றத்தை நோக்கிய பயணத்தில் பங்கேற்றனர். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனாம் தெரிவித்தார்.

யாழ்ழிப்பாணத்தில்செய்தியாளர்களிடம்அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

,எமது யாழ் பெரிய பள்ளிவாசல் 1967ஆம் ஆண்டு சாதாரண ஒரு கொட்டகையாக அமைக்கப்பட்டு அதில் முஸ்லிம்கள் தொழுகை நடத்தினார்கள்.

2002இல் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியபோது பள்ளிவாசலை உடைந்து கிடந்தது. பெரும்கஷ்டங்களின்மத்தியில்தான் அதனைச் சீரமைத்தோம். ஒவ்வொரு தனவந்தர்களிடமும் பண உதவி பெற்று பள்ளிவாசலை மீளக் கட்டிடயெழுப்பினோம். இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்களுக்கும் வெளி இடங்களில் இருந்து வரும் முஸ்லிம்களுக்குமான மார்க்கத் தலமாக அது விளங்குகின்றது.

அப்படிப்பட்ட பள்ளிவாசலின் நிர்வாகத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரே தலைவராக இருக்கவேண்டும். அதுதான் நியயாமும்கூட. ஆனால் பள்ளியில் இந்தமுறை நிர்வாகத் தெரிவை நடத்தியவர்கள்வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்திருக்கிறார்கள். இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

யாழ்ப்பாணத்தில் பூர்வீகமாக வாழ்ந்த முஸ்லிம்கள் தங்களுடைய அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரே பெரிய பள்ளியின்தலைவராகவரவேண்டும் என்பது என்னுடைய ஆசை,

பாதிக்கப்பட்ட எமது மக்கள் மீள்குடியேறி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான பள்ளிவாசல் நிர்வாகத் தெரிவை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்தத் தெரிவுகளைநடத்துபவர்களும்சரிமுஸ்லிம் கலாசார திணைக்கள அதிகாரிகளும் சரி யோசிக்கவேண்டும், அவர்களுடைய ஊர்களில்பள்ளிவாசல்நிர்வாக தெரிவு நடந்தால் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராக நியமிப்பார்களா? ஏன் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் இந்த நிலைமை,

இந்த நிர்வாக தெரிவை உடனடியாக நிறுத்தப்பட்டு, புனித ரமலான்மாதம்முடிந்தபிறகுமுஸ்லிம் கலாசார திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் புதிய நிர்வாகத் தெரிவு மீண்டும் நடத்தப்பட்டு யாழ். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் - என்றார்.

## சம்பளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய கொள்ளையர்கள்", "ரூபாய் உயர்ந்தது - நாடு சரிந்தது - சம்பளம் உயர்த்தப்பட்டது"" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏற்றியிருந்தனர்.

மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தியதைத்தொடர்ந்துஆட்சியாளர்களினதோ, நாடாளுமன்றத்தினதோ, அமைச்சரவையினதோ அனுமதி ஏதுமின்றி தனது ஊழியர்களின் சம்பளத்தை வங்கி திடீரென பல மடங்கு உயர்த்தியுள்ளது. இதற்குப் பரவலான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்றத்திற்குவரவழைக்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இது தொடர்பில் விளக்கம் கேட்டனர். சட்டத்தின்படிதமக்கிருக்கும்அதிகாரங்களுக்கு ஏற்பவே மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்துபொதுமக்கள் தற்போது தமது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

## 23 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவிதரன்மூளாய்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காகயாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும்அங்கும்சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.

பழிக்குப்பழி என்ற ரீதியில் இவர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார் என்றுசந்தேகிப்பதாகவட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். கொலையாளிகள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.



காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பேராளர் மாநாடு சிறப்புற நடந்தது





(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பேராளர் மாநாடு கடந்த சனிக்கிழமை, தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் கட்சியின் பிரதித் தலைவர் அக்பர் அலி (நாசார் ஹாஜி) தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ. ஏ. கலீலுர் ரஹ்மான் கட்சியின் கணக்கு அறிக்கையை சமர்ப்பித்து கொழும்பில் தேர்தல் வாக்கு மூலம் ஜனநாயக ரீதியில் பேரம் பேசி எமது உரிமைகளை எவ்வாறு வென்றெடுப்பது என கூடியிருந்த கட்சி உறுப்பினர்களுக்கு விளக்கி உரை நிகழ்த்தினார்.

கட்சியின் செயலாளர் ஹசன் அலி செயலாளர் அறிக்கையை சமர்ப்பித்து உரையும் நிகழ்த்தினார். மௌலவி சபீர் இஸ்லாமிய அரசியல் என்ற தொனியில் உரை நிகழ்த்தினார்கள்.

கல்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.ஹிஸாம், கட்சியின் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான காதர் மற்றும் முஸம்மில் மற்றும் துறைமுக தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹரீப் மற்றும் பாயிஸ் ஆகியோர் கட்சியின் தலைமை மற்றும் உச்ச சபையில் இணைந்தனர். (05)

# 15 வருட தலைமைத்துவத்துக்காக எம்.ஐ.ஏ. ஜப்பாருக்கு கௌரவம்





(அஸ்லம் எஸ்.மௌலானா)

சுமார் 15 வருட காலம் சாய்ந்தமருது அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்திற்கு சிறப்பான தலைமைத்துவம் வழங்கியமைக்காக ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. அப்துல் ஜப்பார் பாராட்டி கௌரவிக்கபட்டுள்ளார். சாய்ந்தமருது அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் சனிக்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டது.

நிதியத்தின் தலைவர் ஐ.ஏ. குத்தூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக கணக்காளர் திருமதி என்.வி.எம். லரீப் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் ஏ. உதுமாலெப்பை, சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என். எம். றம்ஸான், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முகம்மட், விடயத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ. சாஜிதா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 15 வருடங்கள் தொடர்ச்சியாக இந்நிதியத்தின் தலைவராக உன்னத பணியாற்றிய ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.ஏ. ஜப்பார், பாராட்டுரைகளுடன் அதிதிகளால் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஊர், சமூக நலன்சார் விடயங்களுக்காகவும் ஓய்வூதியர்களின் நலன்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் முன்னின்று உழைக்கின்ற அப்துல் ஜப்பாரின் சேவைகள் காலத்தால் அழியாத மகத்தான பணிகளாகும் என்று இதன்போது புகழாரம் சூட்டப்பட்டார். (05)

# வெறும் சம்பிரதாய நிகழ்வுகளாக மகளிர் தினம் இருக்கக்கூடாது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கருத்து





வருடந்தோறும் நடத்தப்படுகின்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் என்பது வெறும் சம்பிரதாயத்திற்காக நடத்தப்படும் நிகழ்வுகளாக மட்டும் இருக்கக்கூடாது என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரத்தில் இடம்பெற்ற கட்சியின் மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெண்களுக்கு இன்னமும் முழுமையான சமத்துவம் கிடைக்கவில்லை என்பதே எங்களது நிலைப்பாடு, பெண்கள் அனைத்து துறைகளிலும் இன்று மிக வேகமான வளர்ச்சியை அடைந்து வந்தாலும், பல இடங்களில் சமத்துவமின்மை என்பது தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்த நவீன யுகத்திலும் பிற்போக்கு மனப்பாங்குடன் பெண்களை நோக்குவது கவலைக்குரியது. எனவே இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும்.

பால் நிலை சமத்துவம், பெண் உரிமைகள் என்பன வெறும் வார்த்தைகளாக மாத்திரம் இருக்கக் கூடாது அவை செயற்பாட்டு ரீதியாக மாற்றம் பெறவேண்டும். அவ்வாறே வருடந்தோறும் நடக்கின்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளும் வெறும் சம்பிரதாயத்திற்கு நடத்தப்படுகின்ற நிகழ்வுகளாகவும் இருக்கக் கூடாது எனத்

தெரிவித்த அவர் எங்களுடையசமத்துவக் கட்சியைப் பொறுத்தவரை பெண்களுக்குரிய இடத்தை முழுமையாக வழங்கி ஒரு கட்சியாக இருக்கிறது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

சமத்துவக் கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி தர்மலிங்கம் செல்வராணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# 'நாணல் சங்கை' மலர் வெளியீடும் கௌரவிப்பும்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் 'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வின் மலர் வெளியீடும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும், மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில்

சிரேஷ்ட ஊடகவியலாளர் மர்ஹூம் கலாபூசணம் பி.எம்.எம்.ஏ.காதர் நினைவரங்கில் அமைப்பின் தலைவி பாத்திமா சூபா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருது பெற்ற நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினரும் எழுத்தாளருமான ஆசிரியர் மசூறா சுஹூறுத்தீன், இலக்கிய வட்டத்தின் ஊடக ஆலோசகராக இருந்து 2022 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஊடகத்துறைக்கான இளம் கலைஞர் விருது பெற்றுக் கொண்ட ஊடகவியலாளர் ஏ.எல். எம்.ஷினாஸ், மருதமுனையின் முதலாவது பெண் கவிஞரான திருமதி மாஜிதா தவ்பீக் ஆகியோர் விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

நாணல் கலை, இலக்கிய வட்டம் வருடா வருடம் நடத்தி வருகின்ற மகளிர் தின நிகழ்வின் போது சிறந்த சாதனைத் தாய்மார்களை பாராட்டி கௌரவிப்பது வழமை அந்த வரிசையில் இம்முறை சிறந்த சாதனை தாயாக இருவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். ஒருவர் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் அவர்களுடைய தாயாரான முஹம்மது இஸ்மாலெப்பை செய்னப்பு, மற்றவர் ஏ.ஆர். சித்தி நயீமா ஆவார்.

நாணல் சஞ்சிகையினுடைய முதல் பிரதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிறஸ் கட்சியின் தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவிடம் கையளிக்கப்பட்டு வெளியீட்டு வைக்கப்பட்டது. நாணல் கலை இலக்கிய வட்ட உறுப்பினர்களின் கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதோடு, அறிவிப்பாளர் சந்திரபேஸ் கஜானா நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்வில், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, ஸ்ரீலங்கா சென்ஜூடி பரா மெடிக்கல் கல்லூரி பணிப்பாளர் எம்.எம். சப்றாஸ் மன்சூர், இன்ஸ்ரியூட் ஒப் கிளைமேட் சேன்ச் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.பி.ஸியாரத்துல் பெறோஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டதுடன் கலாசார உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

மருதமுனையில்

# 'பாடசாலைக் கல்வி மேம்பாட்டுப் பேரவை' உதயம்: நோன்பு கால சிறப்புச் செயற்பாடு முன்னெடுப்பு



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனைப் பாடசாலைகளின் கல்வி மேம்பாடுகளை ஒருநிலைப்படுத்தி, மாணவர்களை ஒழுக்க விழுமியங்களை நோக்கி திசைமுகப்படுத்தும் நோக்கில் மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் சமூக ஆர்வலர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் நிமித்தம் 'மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை' என்ற அமைப்பானது மருதமுனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளின் மேற்பார்வையுடன் மருதமுனைப் பாடசாலை அதிபர்களின் கூட்டிணைவில் இதற்கான ஆரம்பக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிருவாகத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.றியாஸா(கல்வி முகாமைத்துவம்), பீ. ஜிஹானா ஆலிப் (கல்வி அபிவிருத்தி) உள்ளிட்ட அதிகாரிகளுடன் மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

மருதமுனை கல்வி மேம்பாடு மற்றும் மாணவர்களின் ஒழுக்கச் சீராக்கம் ஆகியன தொடர்பில் விரிவான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. இதன் போது நோன்புகால வணக்க வழிபாடுகள் கருதி சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில், நோன்பு 20 வரை உயர்தரம் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் பாடசாலை நேரசூசி வகுப்புக்கள் மதியம் 12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்றும் ரமழான் பிந்திய பத்தில் அதாவது நோன்பு 20 முதல் பெருநாள் முடியும் வரை எந்த மேலதிக வகுப்புக்களையும் நடத்த முடியாது. தரம் 6 முதல் 9 வரையிலான மாணவர்களுக்கு பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்கள் எதனையும் நடத்துவதில்லை. போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் வீடுகளிலும், பிரத்தியேக நிலையங்களிலும் மேலதிக வகுப்புக்களை நடத்துகின்றவர்கள் மதியம் 12 மணிக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டும். இவ் அறிவுறுத்தல்களை மீறி வகுப்புக்களை நடத்தும் பாடசாலை ஆசிரியர்கள் இனங்காணப்பட்டு அதிபர்களினூடாக அவர்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தரம் 10, 11 மாணவர்களுக்கு திங்கள் முதல் வியாழன் வரை பாடசாலைகளின் மேலதிக வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும். அவை மதியம் 12 மணிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டும். பள்ளிவாசல்களில் தொழுகை நேரங்களில் இடையூறாக செயற்படும் மாணவர்களை விஷேட ஆசிரியர் செயலணி மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுத்தல், பள்ளிவாசல்களினூடாக குத்பாக்களில் அல்லது குத்பாக்களின் பின்னர் மாணவர்களுக்கான குறுகிய நேர வழிகாட்டல் ஆலோசனைகளை ஏற்பாடு செய்தல் (பொருத்தமான வளவாளர்களைக் கொண்டு)

மாணவர்களின் நடத்தைகள் பொது இடங்களிலும் அவதானிக்கப்பட்டு அவை மாணவர் தலைவர், வகுப்புத் தலைவர் தெரிவுகளில் கருத்தில் கொள்ளப்படல், நோன்பு காலத்தில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் சமூகத்திற்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்பதை ஆசிரியர்களுக்கு பாடசாலை மட்டத்தில் வலியுறுத்தல்

மேற்படி விடயங்களை அவதானித்து நோன்பு 10 இல் பேரவை கூடி அதன் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்தல், பேரவையின் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இதனை முன்னேற்பாடாகக் கொண்டு ஏனைய கிராமங்களிலும் கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்க முடியும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் தெரிவித்தார்.

நோன்பு விடுமுறை முன்னெடுப்புக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் பள்ளிவாசல்களினூடாக அறிவிக்கப்படுவதுடன் மருதமுனை உலமா சபையினரின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு வருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மருதமுனையின் கல்வி மற்றும் மார்க்க விழுமியங்களை சீராக்கம் செய்தல் என்கின்ற எண்ணக்கருக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டுப் பேரவையின் இலக்குகளை அடைய மருதமுனையின் மார்க்க அமைப்புக்கள், புத்திஜீவிகள்,பொதுநிறுவனங்கள்,பொதுமக்கள் ஆகியோர் ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(05)

# 2 மெகா வாட்ஸ் சூரிய மின்சக்தி நிலையம் மட்டக்களப்பு ஒருமுழச்சோலையில் திறப்பு





2 மெகா வாட்ஸ் சூரிய மின்சக்தி நிலையத்தினை நேற்று (திங்கட்கிழமை) மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட கொம்மாதுறை வடக்கு ஒரு முழச்சோலை கிராமத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர மற்றும் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் இணைந்து திறந்து வைத்தனர்.

இந் நிகழ்வின் போது, எமது நாட்டிற்கும் மக்களுக்கும் பயனுள்ள முதலீட்டு திட்டத்தை முன்னெடுத்து நாட்டின் மின்சார உற்பத்திக்கு பாரிய பங்களிப்புச் செய்து வரும் வெக்வே சோலார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஊடாக மட்ஃ ககுஃ ஒருமுழச்சோலை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் உட்கட்டுமான பணிகளுக்காக ஷரூபா ஐந்து லட்சம் நிதியுதவியையும் அமைச்சர் காஞ்சன விஜேயசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து பெற்றுக் கொடுத்திருந்தனர்.

கடந்த வருடம் எமது நாடு எதிர்கொண்டிருந்த எரிபொருள் தட்டுப்பாடு அதனுடன் இணைந்த 15-20 மணி நேரம் வரையான மின் துண்டிப்பு, அதன் காரணமாக நாட்டின் உற்பத்தியில் ஏற்பட்ட குறைபாடு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பல மாற்று மின் உற்பத்தித் திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தி வரும் நிலையில், அண்மையில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திர காந்தன் அவர்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அனுமதியின் ஊடாக, வருடாந்த மின் உற்பத்தியில் 20கிலோவாட்ஸ் மின்சாரத்தைப் பிறப்பிக்கத்தக்க, விவசாய செய்கையுடன் கூடிய 10 மெகாவாட்ஸ் சூரிய மின்சக்தி நிலையம் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட நாவற்காடு கிராமத்தில் அமைச்சர் காஞ்சன விஜேயசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

மேலும் நாட்டினுடைய மின்சார உற்பத்திக்கும், மின் துண்டிப்பில்லாத ஒரு நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சார உற்பத்தியை வலுப்படுத்தி முதலீட்டு நிறுவனங்களை எமது மாவட்டத்திற்குள் முதலீடுகளை செய்வதற்கு ஊக்குவிப்பதன் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளைத் தனியார் துறை மூலம் அதிகரித்து வறுமையை முடிந்தவரை போக்க இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் அவர்கள் பல முனைப்பான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார்.

இந்த நிகழ்வில் எஸ்எல்எஸ்ஈஏ இன் தலைவர், பொறியியலாளர் ரஞ்சித் சேபால, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் தனபாலசுந்தரம், ஏறாவூர் பற்று பிரதேச சபை செயலாளர் பற்குணம் ,இலங்கை மின்சார சபையின் பிரதேச நிறைவேற்று பொறியியலாளர் திருமதி அனிதா,

ஒருமுழச்சோலை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் சுந்தரலிங்கம், வெக்வே சோலார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்களான நாதன் சிவலிங்கம், ரஞ்சித் சேபால, திரேன் குண்டன்மல், ரஞ்சித் டியோன் உட்பட இலங்கை மின்சார சபை ஊழியர்கள், சோலார் நிறுவனத்தின் பணியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# புனிதமிகு ரமலானை வரவேற்கும் முகமாக மாபெரும் சிறுவர் பேரணி





புனிதமிகு ரமலானை வரவேற்கும் முகமாக மாபெரும் சிறுவர் பேரணி நேற்று (திங்கட்கிழமை) கிண்ணியாவில் இடம்பெற்றது. இஸ்லாமியர்களில் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான நோன்பை வரவேற்கும் முகமாகவே இந்தப் பேரணி இடம்பெற்றது.சிறுவர் செயற்பாட்டு மையமான அல் மஹ்தூம் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். நோன்பை வரவேற்கு முகமாக பல்வேறு வகையான வசனங்கள் அமைந்த பதாகைகளை ஏந்தியவாறு கிண்ணியா புகாரியடி சந்தியில் ஆரம்பித்த ஊர்வலம் ஜாவா பள்ளியில் ஊடாக நகர சபை மைதானத்தை வந்தடைந்தது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அருள் நிறைந்த ரமழான் பாக்கியம் சகலருக்கும் என்றும் கிடைக்கட்டும்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் வாழ்த்து



அருள் நிறைந்த ரமழானின் பாக்கியங்களை அடையும் சந்தர்ப்பத்தை எல்லாம் வல்ல அல்லாஹு'த்தஆலா சகலருக்கும் வழங்க வேண்டுமென பிரார்த்திப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். புனித ரமழானை வரவேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு -

அல்லாஹ்வின் அருட்கடாட்சம் கிடைக்கும் புனிதமிக்க பெறுமதியான ரமழான் எம்மை நெருங்கியுள்ளது. இம்மாதத்தில் நல்லமல்கள் செய்து புனிதவான்களாக மாறுவதற்கு முயற்சிப்போம். அல்லாஹ்வுடன் நேரடியாக அடியானை இணைக்கும் ஆத்மீக உணர்வே நோன்பு. நோன்பாளியின் பிரார்த்தனைகள் வீண்போவதில்லை.

இன்னொரு சந்தர்ப்பத்துக்காக காத்திராமல் வந்துள்ள ரமழானை உச்சளவில் பயன்படுத்துவோம். இக்காலத்தில், நாம் செய்யும் நல்லமல்கள் சமூக ஐக்கியத்துக்கு கேடாகக் கூடாது. இதில், மிகக் கவனமாகச் செயலாற்ற வேண்டும். நோன்பு நோற்பது, திறப்பது எல்லாம் மிகச்சிறந்த நல்லமல்கள். இந்த நல்லமல்கள் பிறருக்கு பிரச்சினையாக அமையாமல், நாம் செயற்படுவது அவசியம். இஸ்லாமிய நெறிமுறைகள் சமூக ஐக்கியத்தை உருவாக்குவதை அடித்தளமாகக் கொண்டவை. இஸ்லாத்தின் இந்த இலட்சியத்திலிருந்து முஸ்லிம்கள் விலகிச் செயற்படக்கூடாது.

இக்காலத்தில் முஸ்லிம்கள் எதர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள நல்லமல்களூடாக நாம் பிரார்த்திப்போம். அன்பு, நல்லெண்ணம் உள்ள ஆட்சியாளர்களை ஏற்படுத்த நாங்கள் எடுக்கும் அரசியல் பிரயத்தனங்கள் வெல்வதற்கு பிரார்த்தனைகளும் பிரதானமானவை. கடந்தகால அரசியலில் ஏற்பட்ட கசப்புகள் மீண்டும் ஏற்படக்கூடாது.

சமூக நோக்கிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாக்கியத்துக்கு அல்லாஹ்வின் அருளை நாடி நிற்கிறோம். நிம்மதியாக நோன்பு நோற்று, அமைதியாக நோன்பு திறக்கும் சூழல் நாட்டில் ஏற்பட வேண்டும்.

முஸ்லிம் சகோதரர்கள் சகலரும் நோன்பின் மகிமையை அடைந்துகொள்ளும் பாக்கியம் கிடைப்பதற்கு அல்லாஹ்வை பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.(05)

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு கிண்ணியாவில் விளக்கமளிப்பு



கிண்ணியா பிரதேசத்தில் சிறுதோட்ட மற்றும் மேட்டு நில பயிர் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கையில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வுகள் சம்பந்தமாகவும் கிண்ணியா ஆலங்கேணி விவசாய போதனா ஆசிரியர் பிரிவின் நெடுந்தீவு கிராமத்தில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. ஹலிசின் அறிவுறுத்தலுக்கு அமைவாக விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் பிரிவுகள் இணைந்து இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தக் கலந்துரையாடலின் போது, பயிர்ச் செய்கையில் ஏற்படும் நோய் பீடைத் தாக்கங்கள் அவற்றை இனம் காணுதல், கட்டுப்படுத்துதல் சம்பந்தமாகவும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டன.

அத்துடன் நவீன விவசாய முறைகளைக் கையாளுதல் விளைச்சல் தரக்கூடிய விதைகளை வாங்குதல் முதலான பல விடயங்கள் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டன.

நிலாவளி மேற்கு உதவி விவசாய பணிப்பாளர் சி.ஆர்.டி.துஷ்யந்தி, ஆலங்கேணி விவசாய போதனா ஆசிரியர் ஏ.எம்.எம். மன்சூர் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளர்களாக கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா, திருகோணமலை மாவட்ட விவசாய பணிப்பாளர், டி. கருணைநாதன் முதலான அதிகாரிகள் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். (05)

# மாற்றுதிறனாளிகளுக்கான மெய்வன்மைப் போட்டிகள்





(ஹஸ்பர் ஏ.எச்)

மாற்றுத்திறனாளிகளுக்கு உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி நேற்று (திங்கட்கிழமை) மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் தி/ இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தம்பலகாமம், மூதூர், கிண்ணியா, கந்தளாய், பட்டினமும் சூழலும், வெருகல், கோமரன்கடவல குச்சவெளி, சேருவில பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள சகன செவன அமைப்பின் மாற்றுதிறனாளிகள் மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேசத்தில் உள்ள எச்ஓபிஈ நிறுவனத்தின் மாற்றுதிறனாளிகள் பங்கு பற்றியதுடன் அவர்களால் இயலுமையுடைய அனைத்து போட்டி நிகழ்ச்சிகளிலும் இதன்போது பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது பங்குபற்றிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாற்றுதிறனாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன், பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு இமாம்கள் முகத்தின்மாருக்கு கௌரவம்

(தில்சாத் பர்வீஸ்)

ஓசிடி அமைப்பின் தலைவரும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டமிடல் பகுப்பாய்வாளரும் விஞ்ஞான முதுமானியும் சமூக சேவையாளருமான அஸ்மி யாசினின் முழுமையான வழிகாட்டுதலில் சம்மாந்துறையில் உள்ள இமாம்கள் மற்றும் முஅத்தின்மார்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது அம்பாறை மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தரும் அமைப்பின்ஆலோசகருமான ஹனிபா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் தலைவர் அஷ்ஷெய்க் அமீர் நளீமி(முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்) சிறப்பு அதீதியாக கலந்து கொண்டதோடு, மேலும் இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ரியாஸ், மௌலவிசலாஹுதீன் ஓசிடி அமைப்பின் அமைப்பாளர் ஆசிக் , அமைப்பின் செயலாளர்களான பிறோஸ், சரோஸ் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# மேய்ச்சல் தரை பிரச்சினை குறித்து மாவட்ட மேலதிகச் செயலருக்கு மனு



கிளிநொச்சி மாவட்டத்தின் கனகாம்பிகைக் குளம் திருவையாறு மேற்கு இரத்தினபுரம் குடியேற்ற திட்ட கால்நடை வளர்ப்போர் பண்ணையாளர்கள் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளை மீட்டுத் தருமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனிடம் மகஜரொன்றை நேற்று (திங்கட்கிழமை) கையளித்தனர்.

இதன் போது, பண்ணையாளர்களின் கால்நடைகளை சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபடுவதற்குரிய வகையில் நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனகாம்பிகைக் குளம் திருவையாறு மேற்கு இரத்தினபுரம் குடியேற்ற திட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் நேற்று கிளிநொச்சி மாவட்டச்செயலகத்திற்கு வருகை தந்து குறித்த மகஜரை மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

மேற்படி மகஜரை பெற்றுக் கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களோடு கலந்துரையாடியதன் பின்னர் இப்பிரச்சனை தொடர்பில் தீர்மானம் எடுப்பதாகத் தெரிவித்தார். (05 - 113)

காலைக்கதிர்
Kalaikkathir

# ஆதரவற்ற மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு





இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதி அனுசரணையில் மட்டு. அம்பாறை மாவட்ட ஆதரவற்ற மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்வானது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் தொடர்பாளர் அமைப்பான பாண்டிருப்பு ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ந.கமலநாதன் ஓய்வுநிலை அதிபர் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நிறுவகத்தின் பாண்டிருப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிதி உதவி கடந்த காலங்களில் நமது நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம், உள்நாடடுப்போர் மற்றும் காரணங்களால் தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் தமது பாடசாலைக் கல்வியைத் தொடர சிரமப்படுகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தமது பாடசாலைக் கல்வியை பூரணப்படுத்தும் வரை (தரம்- 1 முதல் க.பொ.த உயர்தரம் வரை) தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பதிமூன்றாவது வருடமாக தொடரும் இந்நிகழ்வில் இவ்வாண்டின் முதற் காலாண்டுக்கான நிதி உதவியை

பதினேழு பாடசாலை மாணவர்களுடன் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மாணவியும் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் பொருளாளர் த.ரவிசசந்திரன் (ஆசிரிய ஆலோசகர்), செயற்குழு உறுப்பினர்களான மு.சுபைந்திர ராஜா (ஓய்வுநிலை அதிபர்), சி. புனிதன் (ஓய்வுநிலை அதிபர்) திருமதி புஸ்பாவதி நவரெட்ணம் (ஓய்வு நிலை ஆசிரியர்) , வி.நகுலேஸ்வரன் (ஆசிரியர்), திருமதி. தியாகராணி சிவகுமார், செல்வி ஞா.தர்மிகா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான நிதி உதவியினை வழங்கி வைத்தனர். (05)

# திட்டமிடல் பணிப்பாளராக எம்.ஏ முனாஸீர் நியமனம்

(சர்ஜ/ன் லாபீர்)

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த எம்.ஏ முனாஸீர் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கிழக்கு மாகாண சபையில் மாகாண திட்டமிடல் செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக சுமார் 15 வருடங்களாக கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேயவிக்ரம முன்னிலையில் கடமைகளை பெறுப்பேறுக்கொண்டார்.

இவர் ஒரு சிறந்த ஆளுமை கொண்ட நிர்வாக அனுபவம் உள்ள ஓர் அதிகாரி ஆவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

# ஊடகவியலாளர் றிபாஸின் தந்தையார் காலமானார்

காலைக்கதிர் பிரதேச ஊடகவியலாளராக நீண்டகாலமாக கடமையாற்றிவரும் எம்.எப்.றிபாஸின் தந்தையாரான ஈஸாலெப்பை முஸ்தபா அட்டாளைச்சேனையில் காலமானார். மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவர், தனது 66 ஆவது வயதில் காலமானார்.

மூத்த புதல்வரான எம்.எப்.றிபாஸ் காலை பணியாற்றி வருகிறார். மர்ஹூம் ஈஸாலெப்பை முஸ்தபாவின் ஜனாஸா ஞாயிற்றுக்கிழமை இஷாத் தொழுகையின் பின்னர் அட்டாளைச்சேனை ஆறாம்பிரிவு முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (05)

# இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கு வெண் பலகை வழங்குதல்!

(தில்சாத் பர்வீஸ்)

இவ்வருட புனித ரமழானை வரவேற்கும் முகமாக சம்மாந்துறை தப்லிகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கு நீண்ட கால தேவையாகக் காணப்பட்ட வெண்பலகை நேற்று (திங்கட்கிழமை) கல்லூரியின் நிர்வாகத்தினரிடம் வழங்கி வைக்கப்பட்டது. கல்விக்கு உதவுவோம், திட்டத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

உதவி செய்தோருக்கு அல்லாஹ் ஈடேற்றம் வழங்குவானாக. (05)

# ரமழான் நோன்பு இன்று ஆரம்பம்

புனித ரமழான் நோன்பு இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பிப்பதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நேற்று (திங்கட்கிழமை) மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இம்மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உலமாக்கள் என பலரும் ஆகிய அமைப்புக்களில் இருந்து குறிப்பிட்ட சிலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதார பூர்வமான தகவல்கள் கிடைக்கப்பெற்றதற்கமைய இன்று (செவ்வாய்க்கிழமை) ரமழான் நோன்பு ஆரம்பிப்பதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. (05)



# சான்றிதழ் வழங்கல்

(எம்.ஏ.றமீஸ்)

அனர்த்த காலங்களின்போது பொதுமக்களை பாதுகாத்து இழப்புக்களை கட்டுப்படுத்தும் வகையில் இளைஞர்களை சமூக மட்டத்தோடு ஒன்றிணைத்து செயற்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'சமூக மட்ட வேலைத் திட்டத்தின்' கீழ் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை செயலகத்தில் நேற்று(திங்கட்கிழமை) மாலை இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி. எம்.இர்பான், அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எல்.ஹனீஸ், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸப்பிர், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.எல்.பாயிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட 50 இளைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவர்களுக்கு நீச்சல், தீ அனர்த்தம், முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் போன்ற துறைகளில் ஒரு வருடம் மற்றும் மூன்று மாத கால பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், துறைசார்ந்தோரின் விழிப்புணர்வு சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்தும் கணிசமான இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்கள் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பு அனத்த அபாயக்குறைப் தொடர்பில் செயற்படவுள்ளனர். (05)

# ஹெரோயினுடன் ஒருவர் நானு ஓயாவில் கைது

நானுஓயா பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் நானுஓயா பகுதிக்கு ஹெரோயின் போதைப்பொருள் கொண்டு சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நானுஓயா பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் நானுஓயா பகுதியில் ஞாயிற்றுக்கிழமை திடீர் சோதனை நடவடிக்கையின் போது புகையிரதத்தில் வியாபாரம் செய்யும் ஒருவரிடம் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொருள் 410 மில்லிகிராம் நிறையுடையது எனவும் சந்தேகநபர் ஈசி கேஸ் முறையில் போதைபபொருள் விநியோகிப்பவர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த சந்தேக நபர் மாவத்தகம பகுதியை சேர்ந்தவர் எனவும் 34 வயதுடையவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முதற்கட்ட விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் நேற்று (திங்கட்கிழமை) ஆஜர்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# மன்னார் 'சதோச' மனிதப் புதைகுழி வழககில் சட்ட வைத்திய அதிகாரியை ஆஜராக உத்தரவு

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கு நேற்று (திங்கட்கிழமை) மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் பேராசிரியர் ராஜ் சோம தேவ், தடவியல் பொலிஸார் உட்பட அனைத்து தரப்பினரினதும் அறிக்கைகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ அடுத்த தவணையில் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராகும் படி கட்டளை ஆக்கப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு தொடர்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் வாதிடும் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிக்கையில் -

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கு நேற்று மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே நீதிமன்றத்தால் கோரப்பட்ட அறிக்கை கடந்த தவணை சட்டவைத்திய அதிகாரி ராஜபக்ஷவால் சமர்ப்பிக்க பட்டிருந்தது. ஆனால் அந்த அறிக்கையில் முழுமையாக எல்லா விடயங்களும் அடங்காத படியால் அது சம்பந்தமாக நேற்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்திருந்தோம்.

அதாவது எடுக்கப்பட்ட மனித எச்சங்களிலிருந்து அதற்கான வயது, அதன் பால் நிலை ,இறப்புக்கான காரணம் ,தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டி இருப்பதோடு பேராசிரியர் ராஜ் சோமதேவவால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அதே நேரம் தடவியல் நிபுணத்துவ பொலிஸார் போன்றவர்களாலும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஒட்டு மொத்தமாக எல்லாருடைய அறிக்கைகளும் பெறப்பட்ட பிறகு தான் குறித்த வழக்கு தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் என நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

இதனை அடுத்து நீதிமன்றம் சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகும் அறிவுறுத்தல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதுடன் குறித்த வழக்கு விசாரணையை மீண்டும் மே மாதம் 13 திகதி அழைப்பதற்காக திகதிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# குருணாகல் வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் 15 வயது சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சிற்றூழியர் கைது

குருணாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 15 வயது சிறுவனை பாரிய பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என குருணாகல் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட பின்னர், இரண்டாவது சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த சிறுவனே இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிகிச்சை பெற்று வந்த சிறுவனை சிகிச்சை பிரிவின் குளியலறைக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது. (05)

# மஹியங்கனை விகாரை மீது துப்பாக்கிப் பிரயோகம்

மஹியங்கனை, தம்பனை, குகுலபொல பிரதேச விஹாரை ஒன்றில் நேற்று (திங்கட்கிழமை) துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விஹாராதிபதியின் அறையை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விஹாரையிலிருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லையென தெரிவித்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!